திரு. என். கணபதி : தலைவரவர்களே, சென்னை கடற்கரைக்கும் மகாபலிபுரம் கடற்கரைக்கும் இடையில் கள்ளக்கடத்தல் அதிகமாக நடப்பதாகப் பலரும் பேசிக் கொள்கிருர்கள். அப்படி அந்தக் கள்ளக் கடத்தல் நடப்பதைத் தடுக்க இந்தக் கடற்கரையை முன்னேற்றுவது நல்லது. அந்த நல்ல திட்டம் பற்றி அரசு ஆராயுமா? என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக் கடத்தல் பம்பாய் கடற்கரை யோரத்தில் நடப்பதாகத் தான் அடிக்கடி பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறேன். சென்னைக் கருகில் நடப்பதாகக் கேள்விப்படவில்லை, அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசுக்கு இல்லை.

தனியார் பேருந்துகளில் வானெலிப் பெட்டிகள்

* 316 வினு—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறை பஸ்களில் ரேடியோக்களை வைக்கக் கூடாதென அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பயணிப் பேருந்துகளில் அல்லது ஒப்பந்தப் பேருந்துகளில் வானெலிப் பெட்டிகளை உபயோகிக்கக் கூடாது என்று அரசு ஆணைகள் எதுவும் பிறப்பிக்கவில்லை எனினும், பயணிப் பேருந்துகளிலும், ஒப்பந்தப் பேருந்துகளிலும் வானெலிப் பெட்டிகளை நிறுவுவது அனுமதிக்கக் கூடாது என்று, சென்னை போக்குவரத்து ஆணையாளர் 1958-ஆம் ஆண்டில் எல்லா வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

(இ) வானெலிப் பெட்டியிலிருந்து எழுகிற இசையில் ஆழ்ந்து வலவரின் கவனம் வேறு பக்கம் திருப்பப்படாமலும், பாதுகாப்பான முறையில் வண்டியோட்டுவதற்கு அவர்கள் விழிப்புடன் இருக்கவும் வகை செய்வதற்காகவே இந்த ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பேருந்துகளில் பயணம் செய்யும் பிரயாணிகளின் அலுப்பினைப் போக்குவதற்காக இனிமேலாவது அத்தகைய வண்டிகளில் வானெலிப் பெட்டிகளை அமைத்திட ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அலுப்பினைப் போக்குவதை விட உயிரைக் காப்பாற்றுவதே மேல் என்ற காரணத்தினுல் வானெலிப் பெட்டிகள் வைக்க உத்தேசமில்லை.